# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்)
## (திருத்தம்)

***2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நிதி அமைச்சர் அவர்களால் 2016, ஒற்றோபர் மாதம் 25 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, செத்தெம்பர் மாதம் 02 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***142 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : 10.00**

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : *இவ்வாசகம் 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தில் 5அ என்னும் ஒரு புதிய பிரிவினை உட்புகுத்துகின்றதென்பதுடன் இத் திருத்தத்திற்கான சட்டப்பயனானது 2016 ஆம் ஆண்டு சனவரி 2 ஆந் தேதியிலிருந்து பயனுறும்வகையில் காணி குத்தகை வரியினை விதித்தலை முடிவுறுத்துவதாகும்.*

## காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தம்)

ச.வ.-ஓ. 14/2016

### 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2016, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்குவந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சட்டத்தில் 5அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

**2.** 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டத்தின் 5அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :-

"2016 சனவரி 1இலிருந்து காணி குத்தகை வரியானது அறவிடப்படுதலாகாது.

5அ. இச்சட்டத்தின் ஏற்பாடுகளில் எவற்றிலும் முரணாக எது எப்படியிருப்பினும், காணி குத்தகை வரி தொடர்பான ஏற்பாடுகள் –

(அ) வெளிநாட்டவர் ஒருவருக்கு ; அல்லது

(ஆ) அத்தகைய கம்பெனியில் ஏதேனும் வெளிநாட்டுப்பங்கு வைத்திருக்கையானது, ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஐம்பது சதவீதம் அல்லது அதற்குமேல் கொண்டுள்ளதான கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்றிற்கு ; அல்லது

(இ) வெளிநாட்டுக் கம்பெனி ஒன்றிற்கு,

2-PL 010173 -450 (2016/08)

2016, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் நிறைவேற்றப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் காணியின் குத்தகை ஒன்றிற்கு ஏற்புடையதாதல் ஆகாது என்பதுடன் அதற்கிணங்க, காணி குத்தகை வரியானது, அத்தகைய தேதியன்று அல்லது அதன்பின்னர் எவரேனும் அத்தகைய ஆளிடமிருந்து அல்லது கம்பெனியிடமிருந்து விதிக்கப்படுதலோ, அறவிடப்படுதலோ அல்லது சேகரிக்கப்படுதலோ ஆகாது.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*